தமிழ்த்திறனறித்தேர்வு - வினா, விடை

இயல் - 3 முழுவதும்

சரியான விடையைத் தேர்க.

1) கூற்று -1 : முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.

கூற்று -2 : விருந்தே புதுமை என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

அ) கூற்று 1,2 சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1,2 தவறு.

2) எந்த இயலில் திருவள்ளுவர், விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே அமைத்திருக்கிறார் ?

அ) துறவறவியல் ஆ) ஊழியல் இ) கடவுள்வாழ்த்து ஈ) இல்லறவியல்

3) தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை - இத்தொடர் இடம்பெற்ற நூல்

அ) திருக்குறள் ஆ) தொல்காப்பியம் இ) சிலப்பதிகாரம் ஈ) கம்பராமாயணம்

4) கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் குறிப்பிட்டவர்

அ) கம்பர் ஆ) செயங்கொண்டார் இ) இளங்கோவடிகள் ஈ) திருவள்ளுவர்

5) விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண

மேன்மேலும் முகமலரும் மேலோர் போல - இத்தொடர் இடம்பெற்றது

அ) கம்பராமாயனம் ஆ) கலிங்கத்துப்பரணி இ) சிலப்பதிகாரம் ஈ) திருக்குறள்

6) கீழ்வரும் கூற்றுகளுள் தவறானதைத் தேர்ந்தெடுக்க

அ) விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியவர் கம்பர்.

ஆ)தனித்து உண்ணாமை தமிழரின் விருந்தோம்பலின் அடிப்படை

இ) விருந்தினரைப் போற்றுதல் பழந்தமிழர் மரபு என்கிறது சிலப்பதிகாரம்.

ஈ) இல்லறம் புரிவது ஙிருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறது திருக்குறள்.

7) அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர் என்று பாடியவர்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

அ) திருவள்ளுவர் ஆ) இளங்கோவடிகள் இ) செயங்கொண்டார் ஈ) இளம்பெருவழுதி

8) குரல் உனக்கு விதைத் தினை உரல்வாய்ப்பெய்து

சிறிது புறப்பட்டன்றோ இலள் - இப்பாடல் வரிகள்....

அ) புறநானூறு- 182 ஆ) புறநானூறு- 316 இ) புறநானூறு -333 ஈ) புறநானூறு - 142

9) அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும் - என்று கூறும் நூல்

அ) புறநானூறு. ஆ) நற்றிணை இ) அகநானூறு ஈ) குறுந்தொகை

10) விருந்தினர்க்கு உணவிட தலைவன் பணையம் வைத்த பொருளாகப் புறநானூறு குறிப்பிடுவது

அ) புதியவாள் ஆ) இரும்புமுரம் இ) சீறியாழ் ஈ) நெருநை

11) இளையான்குடி மாறநாயனார் விருந்து படைத்த திறம் பற்றிக் கூறும் நூல்

அ) சிறுபாணாற்றுப்படை ஆ) பெரியபுராணம் இ) புறநானூறு ஈ) சிலப்பதிகாரம்

12) பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் கொடுத்தவர்கள் எந்நிலத்தவர் ?

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

13) நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன் இரும்புடைப் பழவாள் வைத்தனன் - இத்தொடர் இடம்பெற்ற நூல்

அ) நற்றிணை. ஆ) புறநானூறு இ) குறுந்தொகை ஈ) சிறுபாணாற்றுப்படை

14) சிறுபாணாற்றுப்படை ( பாடல் 160-163 ) உணர்த்தும் விருந்தின் திறம்

அ) இன்மையிலும் விருந்து ஆ) அல்லிலும் விருந்து
இ) நிலத்திற்கேற்ற விருந்து ஈ) வாழையிலை விருந்து

15) புறநானூற்றில் உள்ள 333 ஆம் பாடல். உணர்த்தும் கருத்து யாது ?

அ) தலைவன் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான்.

ஆ) அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறர்க்கும் கொடுப்பர்.

இ) நடு இரவில் விருந்தினர் வந்தாலும் வரவேற்று உணவளித்தாள் தலைவி.

www.Padasalai.Net

ஈ) விதைக்கான தினையை உரலில் இட்டு குத்தியெடுத்து விருந்தளித்தாள் தலைவி.

16) பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ - இத்தொடர் இடம்பெற்ற நூல்

அ) புறநானூறு ஆ) குறுந்தொகை இ) நற்றிணை ஈ) அகநானூறு

17) மருந்தே ஆயினும் விருந்தோடு உண் - இத்தொடர் இடம்பெற்றது

அ) கொன்றைவேந்தன் ஆ) தனிப்பாடல் இ) குறுந்தொகை ஈ) நாலடியார்

18) இட்டதோர் தாமரைப்பூ இதழ்விரித்திருத்தல் போலே

வட்டமாய்ப் புறாக்கள்கூடி இரையுண்ணும் - என்று பாடியவர்...

அ) ஔவையார் ஆ) கம்பர் இ) பாரதிதாசன். ஈ) பாரதியார்

19) நாயக்கர், மராட்டியர் ஆட்சிக்காலங்களில் வழி செல்வோர்க்காக மிகுதியாகக் கட்டப்பெற்றவை

அ) உணவகங்கள் ஆ) சத்திரங்கள் இ) இல்லங்கள் ஈ) மாளிகைகள்

20) வாழையிலையின் வலது ஓரத்தில் பரிமாறப்படும் உணவுப்பொருட்கள்

அ) காய்கறி, கீரை ஆ) உப்பு, இனிப்பு. இ) ஊறுகாய், கூட்டு ஈ) சோறு, காய்கள்

21) வாழையிலையின் இடது ஓரத்தில் பரிமாறப்படும் உணவுப்பொருள் அல்லாதது

அ) உப்பு ஆ) ஊறுகாய் இ) இனிப்பு. ஈ) கீரை

22) அமெரிக்கா மினசோட்டா தமிழ்ச்சங்கம் நடத்தும் வாழையிலை விருந்து விழாவில் இடம்பெறாத உணவு வகையைத் தேர்ந்தெடுக்க

அ) வேப்பம்பூரசம் ஆ) தினைப்பாயசம் இ) புளிக்குழம்பு ஈ) மோர்க்குழம்பு

23) பொருந்து மற்றவன் தன்அருகுற இருத்தல் - இத்தொடரிலுள்ள தொழிற்பெயர் அமைந்த சொல்லைத் தேர்ந்தெடுக்க.

அ) பொருந்து ஆ) இருத்தல் இ) மற்றவன் ஈ) அருகுற

24) விவேகசிந்தாமணியில் உள்ள நான்காம் பாடல் உணர்த்தும் கருத்து

அ) உப்பில்லாமல் உணவிடுதல் ஆ) அறுசுவை உணவிடுதல் இ) இன்சொல் பேசி உணவிடுதல். ஈ) உறவினர்க்கு உணவிடுதல்

25) அதிவீரராம பாண்டியர் எழுதிய நூல் அல்லாதது எது ?

அ) கர்ம புராணம் ஆ) வாயு சம்கிதை இ) நைடதம் ஈ) நறுந்தொகை

26) காசிக்காண்டம் நூலில் பாடுபொருள்களுள் தவறானவற்றைக் கண்டறிக.

அ) மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆ) கொற்கை நகரத்தின் பெருமைகள்

இ) பெண்களுக்குரிய பண்புகள் ஈ) வாழ்வியல் நெறிகள்.

27) விருந்தினனாக ஒருவன் வந்து...எனத்தொடங்கும் பாடல் காசிகாண்டத்தின் ........ ஆவது பாடல்

அ) 4 ஆ) 14 இ) 17 ஈ) 18

28) கூத்தராற்றுப்படை ........ அடிகளைக் கொண்ட நூல்.

அ) 543. ஆ) 563. இ) 573. ஈ) 583

29) கூத்தராற்றுப்படையில் மலையில் எழும் பலவகை ஓசைகள் எவ்வாறு உருவகப்படுத்தப்பட்டுள்ளது ?

அ) யானையாக ஆ) யானையின் மதமாக இ) பறவையாக ஈ) கூத்தராக

30) மான விறல்வேள் வயிரியம் எனினே- இத்தொடரில் கூத்தரைக் குறிக்கும் சொல்

அ) வயிரியம் ஆ)மானர் இ) விறல்வேள் ஈ) வேள்மான்

31) கீழ்க்காணும் வட்டார வழக்குச் சொற்களுள் தவறானதைத் தேர்ந்தெடுக்க.

அ) மகுளி- சோற்றுக்கஞ்சி ஆ) பாச்சல்- பாத்தி இ) அலுக்கம்- அணுக்கம். ஈ) பதனம் - மேல்கஞ்சி

32) கரிசல் மண்ணின் படைப்பாளி என்று போற்றப்படுபவர்

அ) கு.அழகிரிசாமி ஆ) கி.ராஜநாராயணன் இ) பூமணி ஈ) செயப்பிரகாசம்

www.Padasalai.Net

33) அருகு எடுக்கிறதுலேயே நம்ம வாழ்நாள் முக்காவாசி போயிடும்போல " சடைத்துப் புளித்துப் போவார் அன்னமய்யாவின் பாட்டனார் - இதில் சடைத்துப் புளித்து என்ற சொல் உணர்த்தும் பொருள்

அ) கவனம் ஆ) சலிப்பு இ) வருத்தம் ஈ) தொலைவில்

34) கரிசல் இலக்கியப் பரம்பரையில் தொடர்பில்லாத எழுத்தாளரைத் தேர்க

அ) வீரவேலுசாமி ஆ) சோ.தர்மன் இ) பூமணி ஈ) சா.கந்தசாமி

35) கி.ராஜநாராயணனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் எது ?

அ) கோபல்ல கிராமம் ஆ) கரிசல் வட்டாரச் சொல்லகராதி இ) கோபல்லபுரத்து மக்கள் ஈ) கி.ராஜநாராயணன் கதைகள்

36) 1991 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருதினைப் பெற்றவர்

அ) செயப்பிரகாசம் ஆ) ராஜநாராயணன் இ) சா.கந்தசாமி ஈ) கு.அழகிரிசாமி

37) கறங்கு இசை விழவின் உறந்தை - என்ற அகநானுற்றுப் பாடலில் வரும் உறந்தை எனும் ஊர் தற்போது எந்த மாவட்டத்திலுள்ளது ?

அ) நாமக்கல் ஆ) திருச்சிராப்பள்ளி. இ) தஞ்சாவூர் ஈ) ஈரோடு

38) கோபல்லபுரத்து மக்கள் என்னும் கதை பற்றிய கீழ்வரும் கூற்றுகளுள் தவறானதைக் கண்டுபிடிக்க.

அ) கோபல்ல கிராமம் எனும் புதினத்தைத் தொடர்ந்து எழுதப்பட்ட கதை

ஆ) இடைசெவல் மக்களின் வாழ்வியல் காட்சிகளுடன் கற்பனை இடம்பெற்றது.

இ) இந்திய விடுதலைப் போராட்டத்தினைப் பின்னணியாகக் கொண்டது.

ஈ) விருந்தினர் வருகையால் கணவன்- மனைவி இடையேயுள்ள சச்சரவுகள் நீங்கும்.

39) திருச்சி மாவட்டத்திலுள்ள உறையூரைப் பற்றி பாடிய சங்கநூல்

அ) நற்றிணை ஆ) புறநானூறு இ) அகநானூறு. ஈ) குறுந்தொகை

www.Padasalai.Net

40) ஏங்க, காலையிலேருந்து வேப்ப மரத்துல காக்கா விடாம கத்திக்கிட்டே இருக்கே பார்க்கலியா ? நிச்சயம் யாரோ விருந்தாளி வரப்போறாங்க பாருங்க - இத்தொடர் யார் கூற்று ?

அ) ராஜநாராயணன் ஆ) தர்மன் இ) அழகிரிசாமி. ஈ) தஞ்சாவூர்க் கவிராயர்

41) வினையெச்சத் தொடருக்குச் சான்று தருக.

அ) பாடினாள் கண்ணகி ஆ) பாடி மகிழ்ந்தனர் இ) வந்தார் அண்ணன் ஈ) அவர் பாடகர்

42) கேட்க வேண்டிய பாடல், சொல்லத் தக்க செய்தி - இவை எதற்குச் சான்று ?

அ) தெரிநிலைப்பெயரெச்சம். ஆ) குறிப்புப் பெயரெச்சம் இ) கூட்டுநிலைப்பெயரெச்சம் ஈ) இவை எதுவுமில்லை

43) மைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து - இத்தொடர் இடம்பெற்ற நூல்

அ) அகநானூறு ஆ) முக்கூடற்பள்ளு இ) முத்தொள்ளாயிரம் ஈ) புறநானூறு

44) சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை - இக்குறள் ....... ஆவது குறள்

அ) 1034. ஆ) 1033. இ) 1032. ஈ) 1031

45) Ancient Literature - என்பதன் கலைச்சொல்லைக் கண்டறிக.

அ) செவ்விலக்கியம் ஆ) பக்திஇலக்கியம் இ) பண்டைய இலக்கியம் ஈ) காப்பிய இலக்கியம்

46) ஆறாம் திணை - என்ற நூலை எழுதியவர்

அ) கு.சிவராமன் ஆ) வ.உ.சி இ) ராஜநாராயணன் ஈ) கு.இன்னாசி

47) திருக்குறளில் 14 ஆவது அதிகாரம் எது ?

அ) கல்வி ஆ) அடக்கமுடைமை இ) விருந்தோம்பல். ஈ) ஒழுக்கமுடைமை

www.Padasalai.Net

48) ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்று பவர் - இக்குறள் இடம்பெற்ற அதிகாரம்

அ) ஊக்கமுடைமை ஆ) ஆள்வினைஉடைமை இ) கண்ணோட்டம் ஈ) கொடுங்கோன்மை

49) நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள் நச்சு மரம்பழுத்தற்று - இக்குறளில் அமைந்துள்ள அணி யாது ?

அ) சிலேடை ஆ) மடக்கு இ) எடுத்துக்காட்டு உவமை ஈ) உவமை

50) உரை ஊற்றி ஊற்றிப் பார்த்தாலும் புளிக்காத பால் !

தந்தை தந்த தாய்ப்பால் முப்பால்- இக்கவிதை வரியின் ஆசிரியர்

அ) மேத்தா ஆ) வைரமுத்து இ) அறிவுமதி ஈ) கு.சிவராமன்

விடைகள் :

1) ஆ 2) ஈ 3) இ 4) அ 5) ஆ 6) அ 7) ஈ 8) இ 9) ஆ 10) இ

11) ஆ 12)ஈ 13)ஆ 14)இ 15)ஈ 16)ஆ 17)அ 18)இ 19)ஆ 20)அ

21) ஈ 22)இ 23)ஆ 24)இ 25)அ 26)ஆ 27)இ 28)ஈ 29) ஆ 30)அ

31) ஈ 32)அ 33)ஆ 34)ஈ 35)இ 36)ஆ 37)ஆ 38)ஈ 39)இ 40)ஈ

41) ஆ. 42)இ 43)ஆ. 44)ஈ 45)இ 46)அ 47)ஈ 48)ஆ 49)ஈ 50)இ

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன்,

பட்டதாரி ஆசிரியர் ( தமிழ் ),

பாணாதுறை மேல்நிலைப்பள்ளி,

www.Padasalai.Net

கும்பகோணம் -612001.

தொடர்புக்கு - 9443740120 . email : sjkavin08@gmail.com

www.Padasalai.Net